30.05.2016

அறிவித்தல்

## கிழக்கு மாகாண கலைஞர்கள் விபரம் திரட்டல் – 2016

பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் கிழக்கு மாகாண கலைஞர்களின் தகவல்களை மையப்படுத்திய தரவுத்தளம் ஒன்றினை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்திலுள்ள சகல இனங்களையும் சார்ந்த அனைத்து துறைகளிலும் ஈடுபடும் கலைஞர்களின் தகவல்களை வினைத்திறனான முறையில் கலாசார உத்தியோகத்தர்களினூடாக திரட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது..

இப் பணி நிறைவேற்றுகைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள காலம் 01/06/2016 – 01/07/2016 வரையாகும்.

இச் செயற்திட்டத்திற்கு அதிகூடிய முக்கியத்துவம் வழங்கி கலாசார உத்தியோகத்தர்கள் கலைஞர்களை நேரடியாக சந்தித்து தகவல்களை வழுவற்ற முறையில் திரட்ட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண கலைஞர்கள் தமது தகவல்களை வழங்க தாம் வதியும் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரை தொடர்பு கொள்ளலாம்.

திருமதி.சிவப்பிரியா வில்வரத்னம்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.